செ.வெ.எண்:56 நாள்:23.05.2017

# பத்திரிக்கை செய்தி

முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இதுவரை மருத்துவக் காப்பீட்டுத்திட்ட உறுப்பினர்களின் ஆதார் எண் இணைக்கப்படாமல் விடுபட்டுள்ள உறுப்பினர்களின் ஆதார் எண்களை இணைக்கும் பணி கிராமங்கள் தோறும் மே மாதம் முதல் நடைபெற்று வருகிறது. மேலும் உறுப்பினர்கள் www.cmchisonline.cmchistn.com என்ற வலைதளத்திலும் மற்றும் மெபைல் ஆப் பதிவிறக்கம் செய்தும் தாங்களாகவே முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்ட அட்டையை ஆதார் எண்ணுடன் இணைத்து பயன்பெறலாம்.

கரூர் மாவட்ட திட்ட அலுவலர், யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனத்தின் மூலம் ஆதார் எண்களை இணைக்கும்பணி நடைபெற்று வருகிறது. இதற்கான முகாம் கரூர் மாவட்டத்தில் கரூர், அரவக்குறிச்சி, குளித்தலை மற்றும் கிருஷ்ணராயபுரம் ஆகிய வட்டங்களில் நடைபெற்று வருகிறது. பொதுமக்கள் இம்முகாமினை பயன்படுத்தி தங்கள் மருத்துவ காப்பீட்டுத்திட்ட எண்ணுடன் ஆதார் எண்ணை இணைத்து பயன்பெறலாம். மேலும் விபரங்களுக்கு தங்கள் பகுதி கிராம நிர்வாக அலுவலரை அணுகலாம் என கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கு.கோவிந்தராஜ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவிக்கின்றார்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,

கரூர்.